1995 ஏப்ரல் 28]

3. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு குறித்து (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ், ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) மறுத்து, உங்களுக்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். நான் அறிவிப்புக் கொடுத்ததற்குப் பிறகு அதை இங்கே வந்து எழுப்ப முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திருமதி கவிநிலவு தர்மராஜ், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திலிருந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கவுநிலவு தர்மராஜ், உங்கள் இடத்திற்குப் போக வேண்டும் (குறுக்கீடுகள்) நான், அவரது இடத்திற்குப் போக வேண்டுமென்று சொன்ன உடன் போய்க் கொண்டிருக்கிறார். (கூச்சல்-குழப்பம்) ஆனால், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் யார் யார் என்பது ஊருக்குத் தெரியும். உலகுக்குத் தெரியும். (கூச்சல்-குழப்பம்) திரு. டேனியல்ராஜ், நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு இங்கு எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) நான் எழுதி உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன், அதைப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்)

நான் உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன், படித்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) வருவாய்த் துறை ஊழியர்கள் வேலைநிறுத்தப் பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருவாய்த் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது பற்றிய பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் என்னிடம் அனுமதி கேட்டிருக்கிறார். அவருக்கு அனுமதி வழங்கி இருக்கிறேன். அந்தப் பிரச்சினையை, மிக இன்றியமையாத ஒரு பிரச்சினையை அவர் இப்போது பேரவையில் எழுப்புவார். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடுகள்)